உ

சிவமயம்.

# வேளாளன்

## தூத்துக்குடி.

“மேழிச் செல்வம் கோழை படாது”

வயது 1 } 1105-ஞு சுக்கில ௵ மாசி ௴ 1 { மாதம் 11

“அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே”

## சமூக கனவான்களுக்குச் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்.

கனவான்களே! உங்கள் ஆதரவைப்பெறலாமென்ற முழு நம்பிக்கையுடன் உங்களுக்கு இதுவரை யாராலும் வெளியிடப் பெறாத நமது புதிய “வேளாளனை” பத்து மாதங்களாக அனுப்பி வருகின்றோம். சந்தாவை இதுவரை செலுத்தாத அன்பர்கள் “சமூக நலன்” என்பது ஒன்றையேகருதி விரைவில் சந்தாவை மணியார்டரில் அனுப்பி ஆதரிக்க வேண்டுகின்றேன். வி. பி. யில் அனுப்பும்படி நீங்கள் அறிவித்தாலொழிய நானாக யாருக்கும், வி. பி யில் அனுப்பப்போவதில்லை. ஏனென்றால் வி. பி. யில் அனுப்பும்படி எழுதியவர்களிற் சிலர் வி. பி. யைப்பெற்றுக்கொள் ளவில்லை நாமாக அனுப்பியவர்களிற் சிலர் வி. பி. யைப் பெற் றிருக்கின்றனர். பொதுவாக வி. பி. யில் அனுப்புவது இருசா ராருக்கும் நட்டமேயாகும். பத்திரிகை நடக்குமோ நடக்காதோ என்ற சந்தேகத்துடனிருந்தவர்கள் இனி சந்தா அனுப்பப் பின் தங்கமாட்டார்களென்று நம்புகின்றேன். பத்துமாதம் பத்திரி கை[illegible]ம் பணம் அனுப்ப யாரும் பின் தங்கமாட்டார்களென் [illegible] பின் [illegible]ங்குவது நியாயமில்லையென்றும் எண்ணுகின்றேன்.

பத்திராதிபர்.

## ஆங்கிலங்கற்ரோரின் அவதி.

தற்காலம் ஆங்கிலக்கல்வி கற்று கல்லூரிகளினின்று வெளி வரும் நமது மாணவர்களின் நிலை பெரிதும் இரங்கத்தக்கதாயிருக்கின்றது. கல்லூரிகளின் மதில்களைக்கடந்த இவர்களுக்கு லௌகிக உலகம் புதிய காட்சியை வழங்குகின்றது. தங்கள் வருங்கால வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படும் கல்வியை இவர்கள் பயிலாததாலும் நகர வாழ்வில் மோகங்கொண்டுள்ளதாலும் நவீன நாகரீகம் வேண்டுமென்ற விருப்பத்தாலும் இவர்கள் உள்ளம் உத்யோகத்தில் ஒடுங்குகின்றது. தற்போதைய நிலையில் உத்தியோகங்கள் குறைவு; அவைகளை அவாவிநிற்போரின் தொகையோ மிக அதிகம். இதனால் ஆண்டுதோறும் வேலையில்லாத்திண்டாட்டம் பெருகிவருகின்றது. சமீபத்தில் நமது சென்னைமாகாண சிவில் நீதிமன்றமுன்சிபு உத்தியோகத்திற்கு சுமார் முப்பது பேர்களைத் தேர்ந்தெடுக்க நேர்ந்தது. முப்பதுக்கு முன்னூறு பேர்கள் அங்குமிங்கும் ஆடி ஓடி யலைந்தனர். அவர்கள் பட்ட பாட்டைப்பார்த்தால் பரிதவியாமலிருக்க முடியாது. அந்தோ! இவர்கள் நிலை குறித்து நாம் பெரிதும் இரங்குகின்ரோம். சுமார் பதினைந்து வருடங்கட்கு முன் வக்கீல்த்தொழிலை நிர்வகித்துவந்தோர் நிலை ஒருவாறு செம்மைப்பட்டிருந்தது. வரவர வக்கீல்த்தொழிலை மேற்கொள்வோர் தொகை பெருகிவருகின்றபடியால் தற்கால வாழ்க்கை நிலை செம்மையுறுவதற்கில்லை. இதுபோலவே பிறதுறைகளிலுள்ளோர் நிலையுமிருக்கின்றன.

ஆகவே நமது இளைஞர்கள் ஆங்கிலக்கல்வியைப்பயின்றதனு பலனாக வாழ்க்கையை வறுமையின்றி நடத்தமுடியவில்லை. கல்லூரிகளில் கற்குங்காலை கைத்தொழில் முறையையோ விவசாய முறையையோ அவாவி அறிந்துகொள்ளவுமில்லை. அறிந்துகொள்ள வசதியுமில்லை. ஆகையால் ஆங்கிலத்தை ஒருமொழி என்பதற்காகமட்டும் பயிலவேண்டுமேயன்றி வாழ்க்கை நடாத்தும் வாழ்விற்குரிய வழியெனப் பயிலுதல்கூடாது.

நமது இந்தியா இயற்கையில் விவசாயத்திற்கும், கைத்தொழிலுக்கும் இசைந்தநாடு. நமது நாட்டின் பொருளாதார நிலை செம்மைபெற வேண்டுமானால் இந்தியர் செம்மையான வாழ்வு நடாத்த வேண்டுமானால் விவசாய அபிவிருத்தியையும் கைத்தொழில் அபிவிருத்தியையும் நாம் நாடவேண்டும். ஆங்கிலம் படித்துவிட்டுக் கிராமங்களுக்குச் சென்று விவசாயத்தொழில் புரிவதும் கைத்தொழில் புரிவதும் மதிப்புக்குறைவானதென்ற உணர்ச்சி படித்த வகுப்பாரிடையே பரவிவருவது பரிதவிக்கத்தக்கது. அதிலும் வேளாளர்களிடையே மிக விரைந்து பரவிவருவது மிக மிகப் பரிதவிக்கத்தக்கது. விவசாயத்தொழில் வேளாளருக்கே உரியதென்ற உணர்ச்சியின்றி, விவசாயத்தின் உயர்வறியாது, விவசாயத்தொழிலாலேதான் வேளாளர் நிலை உயர்வெய்தியதென்றறியாது, வேளாள இளைஞர்கள் அடிமைப்புத்தியை வளர்க்கும் ஆங்கிலக்கல்வியில் அதிக மோகங்கொண்டு அடிமை வாழ்வாகிய உத்தியோக வாழ்க்கையை நாடுகின்றனர். இந்த நினைவு அடியோடு நீங்கப்படல்வேண்டும். ஆங்கிலங்கற்று உத்தியோகம் பெற்று வாழ்வு நடாத்துகின்றவர்கள் [லஞ்சம் வாங்காமல்] செல்வர்களாக மிளிர்கின்றனரா? அன்றி விவசாயஞ்செய்து, கைத்தொழில் செய்து, வியாபாரம் செய்து வாழ்வு நடாத்துகின்றவர்கள் செல்வர்களாக மிளிர்கின்றனரா? என்று சற்று எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம். ஆங்கிலம் பயிலுவதால் அந்நியநாட்டு நாகரீகத்திற்குள் மூழ்கி ஆடம்பர வாழ்வு நடாத்தி வறுமையில் மூழ்குவது ஒருபக்கம்; சமூக சமயாச்சாரங்களைக் கைநழுவ விடுவது ஒரு பக்கம். விவசாயம், கைத்தொழில்களை இழிவென எண்ணுவது ஒருபக்கம். உத்தியோகம் உத்தியோகம் என்று ஓடித்திரிவது ஒருபக்கம். பி. ஏ. படித்த பிள்ளைகள் 15, 20 ரூபாய் சம்பளத்திற்கு ஏலம்போடுவது ஒருபக்கமாக நாடு நிறைவுற்று மிளிர்கின்றது. இதுகுறித்து எந்த இந்தியனும் இரங்காமலிருக்கமுடியாது.

இனி, உலகத்தில் செல்வமிகுந்த நாடாகிய அமெரிக்காவைப் பற்றிச சிறிது கூர்ந்து நோக்குவோமானால், அங்கு படித்த வகுப்பாரே விவசாயத்தொழிலை ஏற்று நடத்துவதற்கு அருகர் என்ற

ண்ணம் வேருன்றியிருக்கின்றது. அங்கு கோடீசுவரர்களுடைய மக்களும் கையில் விவசாயக்கருவிகளைத் தாங்கிக்கொண்டு வயல்களுக்குச்சென்று சாதாரண குடியானவர்களோடு கலந்து வேலை செய்வது அங்கு ஒரு கௌரவமாகக் கருதப்படுகின்றது. ஜப்பானியர்களோ குறைந்த அளவுள்ள நிலத்தில் ஒரு குடும்பத்திற்கு வேண்டப்படும் எல்லாப் பொருள்களையும் விளைவித்துக்கொள்ளுகின்றார்கள். விவசாயத்திற்குச் செலவிடும் நேரம்போக எஞ்சிய காலத்தை வீட்டுக் கைத்தொழில்களில் செலவழித்து அதன்மூலமாக நிரந்தரமான ஒருவருவாயை ஏற்படுத்திக்கொள்கிறார்கள். இங்கிலாந்து முதலிய நாடுகளிலும் அரசாங்க ஊழியர்கள் பெறும் ஊதியத்தைவிட வியாபாரிகளும் விவசாயிகளுமே அதிக ஊதியம் பெறுகிறார்கள். இயற்கையோடியைந்தவாழ்வு நடாத்துவதற்கும் ஆராய்ச்சிகள் பல செய்வதற்கும் ஆண்டவன் எங்கும் நிறைந்திருக்கின்றான் என்ற உண்மையைத் தெளிந்துகொள்வதற்கும் விவசாயம் உறுகருவியாயிலங்குகின்றது.

இதனை யறிந்து மைசூர் அரசாங்கத்தார் படித்த பலர் விவசாயத்தில் ஈடுபடவேண்டி சமீபத்தில் ஒரு திட்டம தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். விவசாயப் பிரதேசம் ஒன்று ஏற்படுத்தி அதில் பத்துப்பேரைக் குடிபுகச்செய்து, ஒவ்வொருவருக்கும் முப்பது ஏக்கா நன்செய் நிலமும் நாற்பது ஏக்கா புன்செய் நிலமும் அளிப்பது இந்தத்திட்டத்தின் நோக்கங்களாகும். இந்தத் திட்டத்தை இளைஞர்கள் நிறைவேற்றிவைக்க முன்வரவேண்டுகின்றோம். இந்திய அரசாங்கமும இதனைப் பின்பற்றுமானல் இந்தியர் வாழ்வு செம்மைபெறுவது உண்மையே.

---

## திருமகள் கடாட்சம்.

பாளையங்கோட்டை, திரு. C. B. ஆநந்தம் அவர்கள்

### என்கனு உலகு.

முன்தொடர்ச்சி.

(சாண்வயிற்றின் பொருட்டு) வானுஞ்சென்றுவாக் காலுடைய அந்த சுறுசுறுப்புள்ளகுடியானவனுக்கு இவனது புதிய

வாழ்வின் இரசம் பிருந்த பாகத்தில் நேர்ந்த கதி அறிவாளிகளின் உலகம் கண்டு இரங்காமல் இராது. ஏன்? வானுஞ்சென்று வாக்காதுடைய அவனது வளம் இதுகால் எங்கோ ஒளித்துக்கொண்டது; உடம்பெலாம் வெறும் வாயாகவிருந்த அவனது வாசாலகத்தன்மை பிருந்த நா மிகவும் கட்டுப்பட்டுக் கிடக்கின்றது; ஒளி நிறைந்த அவன் கண்கள் அதன் வேலையைச் செய்ய ஒருப்படுவதில்லை. ஆகவே, "சிறியரே மதிக்குமிச்செல்வம் வந்துற்ற காலை ........................குறியறி கண்ணுளாரும் குருடராவர்" என்ற முந்தையோர் அனுபவச் சொற்கள் மிகவும் சரியாகத் தோன்றிற்று.

இவனது நிலையைக் கண்டு பிருந்த கழிவிரக்கத்துடன் நான் செய்யத்தக்கது யாதென யோஜித்துக்கொண்டிருக்கையில், அந்த யுவதி என்முன் தோன்றினள். அவள் என்னை அணுகி, "அன்பனே, என்னைப் பின்தொடர்ந்து வருவாயெனின், இன்னும் இதனினும் மேலான ஒரு அதிசயத்தைப் பார்க்கலாம்" என்றாள். உடனே, நானேதும் பதிற்கூறாது அவளைப்பின்தொடரலானேன். அவளைத் தொடர்ந்து பலவீதிகள் கடந்துசெல்ல அங்கொரு பிரதான ரஸ்தாவில் வர்த்தகக் குழுவினரின் வீதியில் ஒரு கோடியிலிருந்த பிரமாண்டமான கட்டடத்தின் வாயிலில்போய் நின்றேம் நின்றதுதான் தாமதம், யுவதியைக்காணவில்லை.

அந்தக்கட்டடம் மிகவும் பெரியது; அநேக அடுக்குகளையுடைய அழகிற்சிறந்த ஒன்று. அதன் தலைப்பில் "இரவிமந்திரம்" என்று தங்கரேக் எழுத்துக்களால்பொறிக்கப் பெற்றிருக்கின்றது. அந்த 'மந்திரம்' சூரிய சேகரப் பிரபுவினது என்று அங்கு என்னெதிர்ப்பட்ட காவலனால் அறிந்துகொண்டேன். இதுதான் இந் நகரில் உயர்ந்த அழகிய.............மாளிகை. சூரிய சேகரப்பிரபு பெரிய அந்தஸ்தும், விசேஷ செல்வாக்குமுடையவர்; இவரினும் தனவந்த சீமான் உலகிலெங்குமில்லை; இவருக்கு அநேக இடங்களில் வர்த்தக நிலையங்களும், தொழிற்சாலைகளும் உள்ளன; இவர் அநேக தரும கைங்கரியங்களை நடத்திவருகின்றார்; பல

பொது ஸ்தாபனங்களில் முதன்மைப்பதவிகளை இவர் வகித்துவருகின்றார். வயதில் நடுத்தரமானவர் செல்வத்திற்கேற்ற அவரது அந்தஸ்தும், குணமும் அவரை யாரும் மதிக்கும்படி செய்யும்.

திருமகளும், கலைமகளும் ஒருங்கு பொருந்தக் களியாடும் "இரவிமந்திர" மாளிகை எனக்குப் பேரின்பத்தைத் தருகின்றதென்பதில் ஐயமின்று. சூரிய சேகரப்பிரபுவின் காவலன் என்னைக் கண்ணுற்றதும் அவன் என்னை மிக அன்புடன் உபசரித்து, ஆதரவாக உள்ளே அழைத்துச்சென்ற மரியாதையை நோக்க (கருவம் இடம்பம் மிகுந்த) மனிதருலகென்று கொள்ள முடியாமல் சிறிது பொழுது தியங்கச்செய்துவிட்டது. ஏன்? என்னை இலட்சியம் பண்ணுவது மனிதருலகில் ஒருவருமில்லை-அதுவும் உதவி கோரி ஒரு செல்வன் மாளிகையின் பக்கல் சென்றால் அதன் காவலனால் எனக்கு வரவேற்புக்குப் பதில் வழியனுப்புத்தான் (சுடுமூஞ்சித்தனமாகக்)கிடைக்கும். அங்ஙனமின்றி 'இரவிமந்திர'க் காவலன் செய்த மரியாதையும், மாசற்ற ஆதரவான உபசரணையும் மனிதருலகினும் மேலான தெய்வ உலகமென அதனை நினைக்கச்செய்தது.

மனோகரமான மாலைப்பொழுது; இரமணீயமான இளந்தென்றல்; பொன்னைப்பழிக்கும் இரவி கிரணங்களின் சாயை; விசாலமான வெளி; சுற்றிலும் அழகிய நறுமணங்கமழும் மலர் நிறைந்த பூஞ்செடிகள் வரிசை வரிசையாக அமைந்துள்ள அழகிய நந்தவனம்; இதயத்தை உருக்கும் இயற்கைத் திருவின் உச்சி வீற்றிருக்கைதான் இன்பக்களியின் போன நிலையம். இத்தகைத்தாய வெளிக்கண் களியாடும் விகாரமற்ற முகமண்டலங்களுடன் இலங்கும் ஆண்களையும், பெண்களையும் பார்க்க மிக ஆநந்தமே-அவர்கள் அனைவரும் மட்டைப்பந்தாடுகின்றனர். சிறிதுநேரத்துள் இரவி தன் கிரணங்களுடன் குடதிசைக்கண்முழு ஓய்வு எடுத்துக் கொண்டான். இரவி பின் அவனது பொறுப்பை நிர்வகிப்பது போல பூரணச்சந்திரன் குணகடலில் குளித்தெழுவபோல மிகவும் நிர்மலமான சோபையுடன் பிரகாசித்துக்கொண்டு எழுந்து அதிவிரைவாக வருகின்றான்.

பந்தாட்டம் முடிந்தது. யாவரும் பக்கலிலுள்ள கங்கையை நோக்கி நடந்தனர். (ஸ்)படிகத்தை நிகர்க்கும் வெகு துல்லியமான அந்த நீர்ச்சலதியில் ஓட்டம் மிகுந்த பிரவாகத்தின் காட்சி அழகிய அந்தச்சந்திரப் பிரபையில் எத்தனை ஆனந்தமாகவிருக்கும்! அந்த யுவர்களான ஆடவரும், பெண்டிரும் கங்கையின் கரையிலுள்ள ஓடத்தின் மீதேறிக்கொண்டு, அதனை நடு ஆற்றிற்கு வலித்துச் செலுத்தினர். அவர்களுடைய இந்தப் பிரயாண வின்பம் வருணித்தற்பாலதன்று. அதில் மூன்று ஆடவரும், மூன்று பெண்களும் அநேகமாக ஒரு தரத்தினராக, மிகவும் கட்டழகர்களாக விளங்கினார்கள். அவர்களது குழு எக்காலும், எந்த ஞான்றும் இன்பமொன்றையே நல்கும். அதிலும் எல்லா வகையினும், சகல அம்சங்களினும் ஒருங்கே பொருந்திய அக்குழுவினருக்கு கலப்படமில்லாத-தனி இன்ப வெள்ளப்பெருக்கே எதிர்த்து நோக்கும் திக்குகள் அத்தனையினும் வாத்தக்கதென்பது மிகையாகாது.

புராண காவியங்களிலுள்ள தெய்வ உலகக்காட்சியை அது நிகர்த்திருந்ததை நிதர்சனமாகக் கண்டேன். வானாடாயினும், வண்டுழாய் மால் நாடாயினும் இன்பக்களி இறுதி பெறுவதென்னும் பெற்றியை இப்பொழுதைய நிலை எனக்கு உணர்த்தலாயிற்று. நடுஆற்றில் இன்பத்தின் முடிமீது ஆர்பரித்துச் செல்லும் யுவகூட்டத்தினருக்கு நேர்ந்ததை என்னவென்பது! அங்கொரு பாறைமீது ஓடம் வேகமாகத்தாக்கப்பெற்று மிகவும் நொறுங்கிப் போயிற்று. அதிலிருந்த யுவர்களைக் காணவில்லை. பிரவாகத்தில் ஒருங்கே சென்றனர்போலும்! இன்பத்தின் முடிமீது இன்பமும், துன்பத்தின் முடிமீது கின்பமும் ஆர்பரிக்கின்றது என்னும் உண்மையை உலகியல் தனது நினவர்த்தமானத்தில் மிகவும் வெள்ளிடையாய்க் காட்டிக்கொண்டிருக்கின்றது.

சிறிது கழித்ததும் நான் மாளிகைநோக்கி மெதுவாக நடந்து செல்லலானேன். இதற்குள் யுவர்கள் மூழ்கிய விஷயமறிந்தது போல மாளிகையே துக்கசாகரத்துள் தனது சோபையை மூழ்கிக் கொண்டுவிட்டது. மிகவும் சிரமத்துடன் சூரிய சேகரப் பிரபுமாக்

திரம் தப்பிக் கரைசேர்ந்தார். தன்மனைவியையும், தன் இளவலை யும், தன் சோதரியையும், மைத்துனனையும் ஒரே நிமிடத்தில் இழந்த இவர் எவ்வளவு பிரபுவாகவிருந்தாலும் சகிக்கக்கூடிய ஒன்றா! பிரபுவின் ஒளி குன்றிற்று; மனம் அமைதியற்று குழப் பத்துட்புகுந்து கொண்டது. உலகம் வெறுக்கைக்கே இடமா யிற்று; எதுவும் இவருக்கு இரஸனையாகத் தோன்றவில்லை. இவ ரது பரிதாபமான நிலையில் நான் குறுக்கிட்டு அவருக்குச்சில இதோபதேசங்கள் செய்யப் புறப்பட்டேன். இந்த நேரத்தில் திடீரென்று ஒரு பெரிய (வெடி) சப்தம் செவிடுபட ஒலித்தது. திடுக்கிட்டு........நடுக்கத்துடன் கண்விழித்தேன். பார்க்கையில், என்னறையில் சாய்மான நாற்காலியில் என்னைக் கண்டேன்; பல மான பேரிடியின் உரத்த முழக்கங்களினிடையே கண்ணைப்பறிக் கும் மின்னல்களுடன் பெரிய மழை பொழிந்துகொண்டிருக் கின்றது.

---

வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கத்தின்

## 15-வது ஆண்டு விழா.

அவைத் தலைவர்:-

**ராவ்சாகிப், திருவாளர், K. S. கற்பகவிநாயகம்பிள்ளை அவர்கள் B.A**

## முகவுரை.

(முன் தொடர்ச்சி)

நம் மரபினருக்கு அமைச்சுரிமை தொன்றுதொட்ட உரிமை யாதலின் அம்முறைபற்றி தற்போதும் நம் மரபினர் இவ்வாசாங் கத்தில் மந்திரிகளாக அழகு செய்யக் கண்டுளோம். இங்ஙனமே இனியும் இம்மரபினர்களே மந்திரிகளாக அணிசெய்யுமாறு சச்சி தானந்த சிவத்தைத் துதிப்போமாக! இங்கு சுகாதார இலாகா மந்திரி கனம் முத்தையா முதலியாரவர்கள் 'சபையின் நோக்கம் நன்கு நிறைவேற' விழைந்தனுப்பிய தந்தி உரிமைபற்றி அனுப் பியதே.

நமது சமயம் யாதெனின் சுத்தாத்துவித சித்தாந்த சிவாநுபூதியினை யனுபவிக்குஞ் சன்மார்க்கநெறியுடைய சைவ சமயமே. நமது வழிபடுந் தெய்வம் சுத்த சாட்குண்ணிய பரிபூரணரான சிவபெருமானே. நமக்கு மட்டோ அவர் தெய்வம்? 'தெய்வமென்பதோர் சித்தமுண்டாகு' மெவருக்கும் அவரே தெய்வம். எப்படியெனின் "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே, மாதொருபாகனார்தாம் வருவர்" என்ற உண்மையை நன்கு உணர்க. நம்மவர்கட்கு சாதிபேதம், சமயபேதம் அறவே அன்று மின்று மென்றுங் கிடையாது. அப்படிச் சாதிபேதமில்லாதிருந்த நமது செந்தமிழ் நாட்டில் வெளிநாட்டினின்று நமது நாட்டிற் குடியேறிய ஆரியர்தான் முதன்முதல் ஜாதிபேதத்தைப் புகுத்தினர். அவர்கள் மதம் ஏகான்மவாதம் அல்லது மாயாவாதம். கொள்கையும் ஸ்மார்த்தக் கொள்கை. அவர்களில் முதற்கணே தென்றிசைக்கேகிக் குடியேறிய அகத்திய முனிவரும் அவரது பிரதம சீடரான தொல்காப்பியனார் முதலாயினரும் சிவநெறியந்தணராக சைவ சமயத்தி னுண்மையை ஆர்வமுடனறிந்து தெளிந்து தமிழ் மறையையும் அவ்வாருணர்ந்துசிவ ஞானிகளானார்கள். இதுபோல் சைவ நெறியுண்மையை உணர்ந்த சிவனெறி அந்தணர் மிகப் பலர். அவர்களைச் சைவ அந்தணர்களாக விருப்புடன் கொண்டோம். அப்படியல்லாத ஏகான்மவாதக் கொள்கையையுடைய ஸ்மார்த்தர்கள் நம்மை மாயாவாதத்தில் மயக்கினர். அத்துவக்கமே நமது சமயம், குலம், ஒழுக்கம், தெய்வபக்தி முதலியன சீர்கேடடையத் துவக்கிய காலம். அறனெறி அன்பு நெறி, அருணெறி முதலிய நன்னெறியில் நடந்துவந்த சைவசமய வேளாளர் இன்பமாய் வாழ்ந்துவருங்காலை வகுத்தனர் நீதியல்லா நீதி. பிரித்தனர் நான்கு ஜாதி. பேதித்தனர் நமது பிரியா நட்பை. நம்மைப் போற்றிப் புகழ்ந்து பொருள் நயந்து நமக்கு நன்மை செய்பவர்கள் போல் தோற்றி பெருங் கேடிழைத்தனர்.

ஆரியர் நான்கு ஜாதிவகுத்ததுமன்றி அவற்றிற்குத் தெய்வீகத் தன்மை கற்பித்து நம்மவர்களை கடைசியாயுள்ள தாழ்மையா

ன சூத்திரர் என்னும் நான்காம் ஜாதியிற்றள்ளி கேவலப்படுத்தி யும் வந்தார்கள். அம்மட்டோ நம்மை நாமே சூத்திரர்களென்று ஒப்புக்கொள்ளவும் செய்தார்கள். தமிழ்ப் பாஷை யொன்றே கற்ற பெரியார் அதுவே வேதத்தின் உறுதியென நம்பி ஒப்புக் கொண்டு, அவ்வித தாழ்மையை அகற்ற வேறு வழி தோன்றாது சிலர் சற்சூத்திரர் என்றும் வேறு சிலர் பூவைசியர்கள் என்றும் முடிவு செய்துவந்தார்கள். அது தவறிலும் பெரிய தவறு. எங் ஙனமெனின், சரித்திர பூர்வமாகவும், ஆராய்ச்சி நூல் மூலமாகவும் தேர்ந்துபார்க்கையில், நாம் அந்நான்கு பிரிவிற் காணப்பட்ட சூத் திரர்கள் அல்லவென்பதும், நாம் சைவ அந்தணர்கள் என்பதும்

ஐயப்பாடின்றி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ்வுண்மையை நாமெ ல்லோரும் உறுதிப்பாடாகக் கொள்ளவேண்டும். திருக்குறளில் அந்தணர் யாரெனக் கூறப்பட்டுள்ளது. ஸ்மார்த்தரது நாகபா சத்தால் கட்டுண்டு மயங்கிக் கிடந்த நாம் அம் மாயையை நீங்கி தெளிவடையுங்காலம் இதுவே நற்காலம். நமக்குப் புத்துயிர் வரும் காலம் (Renaisance). நாம் கொண்டாடுங் காலம். அ வர்கள் எத்தகைய கேடு விளைத்திருப்பினும் அவர்களை நேசித்து, அவர்களிடம் அன்புபாராட்டி எக்காலத்தும் வருவதைத் தவிர அ வர்களை வெறுக்கவாவது, அவர்களுக்கு கேடு நினைக்கவாவது நம் மிடம் கிடையாது. எந்தச் சமயத்திலும் நமக்கு வெறுப்பென் பது ஒருங்கே கிடையாது. ஆதலின் நம்மவர் நமது குலப் பெரு மையையும், நமது சமயப் பெருமையையும் நன்கறிந்து ஒற்றுமைப் பாடுடன் ஒரே சகோதரர்களாகப் பாவித்து நடப்போமாக!

ஸ்மார்த்தர்கள் நீதி வகுத்த முறையில் நமது சகோதரிமார்க ளுக்கு தங்களைப் பெற்றெடுத்து அருமையுடன் வளர்த்த தந்தை யார் சொத்தில் எப்பாகமுங் கிடையாதென வகுத்ததன்றி அவர் களை சுதந்திரமல்லாத நிலைமையிலும் புகுத்திவிட்டார்கள். அந்நி மித்தம் அவர்கள் வாழ்நாளெல்லாம் பெற்றோர், கணவர், பெற்ற மக்கள் இவர்கள் ஆளுகைக்குட்பட்டே நடந்துவர நேர்ந்தமையால் அவர்கள் ஏனைய சமயப் பெண்கள், ஏனைய நாட்டுப் பெண்கள்

போன்று கல்வி, நாகரீகம் முதலியவைகளில் முன்னேறுது போயி னர். இப்போதுதான் முன்வந்து தங்களுரிமைக்கு வாதாடுகிறார் கள். அது கைகூடி நமக்குச் சமமான சுதந்திரத்தோடு அவர்கள் சுகமாய் வாழுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போ மாக.

நமக்குத் தொன்றுதொட்டு உரிமையாயுள்ள சைவ மடால யங்களைச் சீர்திருத்த ஊக்கமுடன்முன் வரவேண்டுவது மிக அவ சியம். இதுவிஷயமாய் ஆலயாதிகாரிகளையும் மடாதிபதிகளையும் தகுதியானவர்கள் அடுத்து இச்சங்கத்திற்குப் போதிய பொரு ளுதவிபுரிய அவர்களை வேண்டுதல் செய்யவேண்டும்.

நம்மவர்களில் 100க்கு 75 பேர் ஜீவனோபாயத்திற்குப் போ திய வழியின்றி துயரப்படுகிறார்கள். அவர்களை அத்துன்பத்தி னின்றும் விடுவித்தல் எல்லாவற்றினும் மேம்பாடான கடமை. இக்கஷ்டம் நம் நாட்டிலன்றி எந்நாட்டிலும் பயங்கரமாய்ப் பரவி வருகிறது. அதனை நிவர்த்திக்க அவ்வந்நாட்டு நிபுணர்கள் தங் கள் புத்தியை அதி தீவிரமாகச் செலுத்திவருகிறார்கள். நாமோ அதைப்பற்றிய சிந்தனை சிறிதுமில்லாமலிருக்கின்றோம். அது அ ரசாங்கத்தாரால்மட்டும் நிவிர்த்திக்கக்கூடியதன்று. நம்மில் பொ ருளுடையவர்களும் கருணையுடன் முன்வந்து நிவிர்த்தி தேட வேண்டும். அன்றேல் மற்றைய நாட்டைவிட பெருங்கேடு விளையும்.

ஆகவே நாம் முதற்கணே தற்சமயம் செய்யும் கடமை யா தெனின்:—(1) நமது சமூகத்தின் பல்வேறுசபைகளையும் இத் துடன் சேர்த்து ஒரே சபையாக்கி அவைகளை இதின் கிளைச் சபை யாக்குதல். (2) இதன் சார்பில் ஒரே பத்திரிகையும், ஓர் அச் சாபீசும் ஏற்படுத்தல். (3) இச்சபையின் மூலதனத்தோடு வே ண்டுவன சேர்த்து ஒரே பாங்கு (Bank) பெரிதாக ஸ்தாபித்தல். (4) பாங்கிங் (Banking] வியாபார முறை, விபசாய முறை இவைகளில் நமது சிறுர்களைப் பயிற்றுதல். (5) ஆலயாதிகாரி களையும், மடாதிபதிகளையும் கொண்டு ஓர் ஆகம பாடசாலை நடத்

தச் செய்தல் முதலியன. ஆனால் உள்ள வேலையைச் சரிவரப் பார்க்கச் சக்தியற்ற நம் மரபினர் அவ்வளவு பெரிய வழியில் எவ்வாறு நடக்க இயலுமெனை ஆசங்கையுண்டாகும். அதுவொரு பொருட்டன்று. பொது நன்மைக்கு உண்மையிற் பாடுபடுபவர்கள் தளர்ச்சியடைய யாது காரணமும் கிடையா. திருவருளும் அங்ஙனே கைகாட்டும். சத்தியம்! சத்தியம்! சிவபெருமான் ஆணையுமதுவே! இதுவே நல்ல தருணம். கிஞ்சித்தும் பின்வாங்காது முன்வந்து கண்திறந்து எழுந்து கடமையைச் செய்வோமாக. நமது சைவ மக்களனைவரும் மாதரசிகளும் இதிற் சேர்ந்து பிசுநியாகக் கொடுக்கிறவர்கள் தவிர, ஏனையவர் ஆண்டுதோறும் ரூபாய் ஒன்றேனும் கொடுத்து உதவிபுரியவேணுமாய்த் தாழ்மையுடன் வேண்டுகிறேன். இச்சங்கத்திற்கு சூட்சும சிவஞானம் பூரணமாயிருப்பதுபோல் ஸ்தூல சிவஞானமும் நிரந்தரமாகவேண்டுவது அவசியம். இச்சங்கத்திற்கும், இதை நிர்வகிக்கும் பெருமை வாய்ந்த அங்கத்தினர்க்கும் பல்லாண்டு! பல்லாண்டு. ஓம். சாந்தி. சாந்தி.

---

## அபிப்பிராயக் கடிதங்கள்.

உ

அவிநாசி, புது நந்தனவருடம்.

அன்பு நிறைந்த சிந்தையீர் அனந்தமுறை முறையே வணக்கம். ஸ்ரீ அவிநாசி நாதன் திருவருளால் நலம். நலமறிந்துவக்க விரும்புகின்றனன். தெய்வச் செந்தமிழ்ச் செல்வ! தாமன்பு கூர்ந்தனுப்பிய வேளாளன் 2, 3ம் வந்துசேரப்பெற்றேன், கண்டு களிபேருவகை பூத்தனன். முதல் நான்கும் அடுத்து அருமையோடும் அனுப்பக்கூடும் என்று எண்ணுகின்றேன்.

தாங்கள் மேற்கொண்டதுபோன்ற பொதுநலங் கருதிய திருப்பணிகளில் அடியேனும் ஒரு சிறிது சம்பந்தமுடையவன் என்பதுமட்டும் ஞாபகப்படுத்துகிறேன். இனி எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நமது "வேளாளன்" நமது சமூகம்

எங்கும்சென்று செந்தமிழும், சைவநலமும், திருவெண்ணீறும் அஞ்செழுத்துஞ் சிறந்தோங்க, உலகெலாம் வேதாகமத்தின் விதி நெறி நின்று இறை பணி புரிய உபகாரமாகும்படி திருவருள் பாலிக்கவேணுமாய் நம் சிவபரம்பொருளின் பொன்னடிகளை போற்றுகின்றேன். சந்தா மணியார்டர்மூலம் அனுப்புகின்றேன்.

அன்பன், அ. சி. கருணாலயசுவாமி.

---

வேளாளர் கல்வி அபிவிருத்திச் சங்கம். வண்ணார்பேட்டை, 11-12-29

மகா-ள-ள-ஸ்ரீ "வேளாளன்" பத்திரிகாசிரியரவர்கள்பாரவைக்கு,

தங்கள் பத்திரிகைக்கு வேண்டும் ஆதரவு இந்தப் பக்கம் சிறிய என்னால் ஆனவரை செய்ய எப்பொழுதும் தயாராயிருக்கிற

தங்கள் இஷ்டன்,
கே. சுப்பிரமணியபிள்ளை, காரியதரிசி.

---

"பொங்கும் மங்களம் எங்குந் தங்குக"

Colombo 21st Dec. 1929.

அன்புமிக்க ஐய,

தாங்கள் அனுப்பிய 'வேளாளன்' பத்திரிகை 1, 2, 3, 4, 8, 9, கிடைக்கப்பெற்றேன். நம்முடைய வேளாளர் மரபு முன்னணியில் நிற்பதற்கெனத் தாங்களெடுத்துக்கொண்ட உழைப்புக்கு வேளாளர் உலகம் பெரிதும் நன்றிசெலுத்தக்கடமைப்பட்டிருக்கின்றது. நிற்க, தற்போது இவ்வுலகின்கண் சிற்சில பத்திரிகைகள், பிறஜாதியினரை தூஷித்தும், புராண இதிகாசங்களை இழிவுபடுத்தி எழுதியும் வருகின்றனவென்பது பலருமறிந்த விஷயம். நமது வேளாளனோ அத்தகைய விஷயங்களில் ஈடுபடாமல் தெய்வபக்தி, சமய ஒழுக்கம், தமிழின் வளர்ச்சி, முதலியவிஷயங்களை எழுதி நம்மனோர்களை ஊக்கப்படுத்துவது பெரிதும் போற்றத்தக்கதே. பொன்னேபோல் போற்றுதற்குரிய நமது வேளா

ளனுக்கு என்னுலியன்றளவு சந்தாதார்களைச் சேர்த்தனுப்ப முய லுகின்றேன். நமது வேளாளனை, வேளாளராய்ப் பிறந்த ஒவ் வொருவரும் ஆதரித்து ஊக்கப்படுத்துவார்களென நம்புகிறேன் வேளாளன் நீடு வாழ்க,. சுபம். பிறபின்,

மு. சு. சுப்பிரமணியபிள்ளை,

---

உ
சிவமயம்

தேவகோட்டை

சுக்கில வருஷம் கார்த்திகை மீ 28-உ

அன்பார்ந்த ஐயா.

தாங்கள் யெனக்கு அனுப்பி வரும் வேளாளன் பத்திரி கையைப்பார்த்து நிரம்ப சந்தோஷம் மடைகிறேன். தாங்கள் நமது சமுக நலங்கருதி இவ்வரும் பெரும் காரியத்தை யெடுத்துக் கொண்டது பற்றி நம்மரபினர் தங்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அன்றியும் இவ்விஷயம் நீடித்து நட ந்து வரும்படி எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

நம் மரபினரும், யெனது நண்பருமான வெங்கிட்டங் குரிச்சி, சிவ. காளிமுத்து பிள்ளையவர்கள் நம் பத்திரிகையைக் கண்ணுற்று, நம்சைவமத வளர்ச்சிக்காக, தாங்கள் முயற்சித்து நடத்திவருவதைப்பற்றி சந்தோஷமடைந்து, அவர்களும் சந்தா தாராய்ச்சேர, விரும்பியதால் ஷை யார்கள் அட்ரசுக்கு இவ்வா ண்டுக்குரிய பத்திரிகைகளை, வி. பி. யில் அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்.

M சுந்தரலிங்கம்.

---

திருவாளர், மு. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள்,
வேளாளன் நிலையம், தூத்துக்குடி.

அன்புமிக்க ஐயா,

குமரன் பிரஸ், 28-12-29

தாங்கள் சமுக முன்னேற்றம்கருதி ஆரம்பித்த தொண்டைக் கேட்ட நாள்முதல் அளவிலா ஆனந்தம் கொண்டேன். நீங்கள்

சொல்லாமலே வேளாளனுக்கு சந்தாதார்கள் சேர்ப்பதில் என்னால் இயன்ற உதவி செய்துவருகிறேன். மேல்கண்ட பிரஸ் பேருக்கு அனுப்பும்பத்திரிகை என்னுடையதே. தங்கள் முயற்சி மென்மேலும் விருத்தியாகி எண்ணிய பலன் கைகூடுமாறு சதா தியானித்துக்கொண்டே இருக்கின்றேன். மற்றும் இவிடத்தால் ஆகவேண்டிய காரியங்களுக்கு எழுதினால் வேண்டுவன செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

அன்புள்ள,

க. சுப்பிரமண்ய பிள்ளை, கொளும்பு.

---

குறிப்பு:—இவைபோன்ற பற்பல கடிதங்கள் நமக்கு ஊக்கத்தை யூட்டு முறையானே வந்து குவிகின்றன. அவையனைத்தும் வெளியிட இயலாமை குறித்து இரங்குகின்றோம்,

பத்திராதிபர்.

---

## சேர்மாதேவிச் சிறுநாட்டாண்மைக்கழகமாண்பு.

நாங்குனேரி, போர்டு பிரதம ஆண் பாட சாலை,

தலைமை ஆசிரியர்:—திரு. S. அருணசலம் பிள்ளை அவர்கள்.

**மேதையீர்!**

நாமகள் உயர்வோ! பூமகள் உயர்வோ! எனப் புவியோர் தம்புலன் வழி காணின் அவ்விருவரும் தத்தம் ஆதிக்கத்தின் உச்சம் கருதி வெவ்வேரிடத்தே உயர்வுறநிற்ப ரெனும் விடையே வரக்காணலாம். ஈண்டு பூமடந்தை ஒருவர்பால் பொலிவுற விளங்கின் நாமடந்தையின் நற்புத்தியல்லால் நலம்பெற லெங்ஙனம்! எனும் கேள்வி முறையால் கல்விச்செல்வியின் கனமுணர்ந்தோராய் கடந்த சில ஆண்டாக போர்டின் நிதியை வாணி எனும் வண்மைசேர் செல்வியின் வளர்ச்சிக்கே வளம்பெற வளங்கலில் குவயத்தென்றும் குன்றாப் புகழ்படைப்ப நின்றிலங்கும் சேர்மாதேவி சிறுநாட்டாண்மைக் கழகமாண்பு சிலதைச் செப்பிடச் செவிசாய்மின்.

இக்கழகம் அப்பாசமுத்திரம் நாங்குனேரி எனும் இரு தாலூகாவாசிகளின் பொதுநலம் நாடி நாளும் உழைப்பதாம். இவற்றுள் கல்வி நலம்பற்றி போர்டார் ஆதீன ஆரம்பத்தில் எத்தனை பாடசாலைகொண்டிருந்தனர்! இதுபோது அவற்றின் எண்ணம் என்ன? எனும் வினவெழுப்பி அவற்றின் விரிவை வியந்தும், ஆங்கு இனவேறுபாடற்று எம்மதத்தரும் சம்மதமாய்க்கொள்ளும் வகையே இலவசமாய் கல்வி கற்பிக்கப்படல்கண்டு களித்தும் போர்டார்பற்றி யான் கூறும் ஏற்றம் போற்றத்தக்கதெனத் தெளிவாராக.

எதற்கும் இடம், பொருள், ஏவல் வேண்டுமென்பர். முப்பொருள் கொண்ட இம் முதுமொழிப்படி போர்டார் ஆங்காங்கு பாடசாலைகளமைத்து கல்வி பரப்பலில் முதலாவதாய இடம்பற்றி ஆய்ந்தறிவதும், இரண்டாவதாய பொருள்பற்றி இயன்றதை எட்டுணையும் பின்வாங்காது வழங்கும் வள்ளற்றன்மையும், மூன்றுவதாய ஏவல்பற்றி நின்ற அப்பாடசாலை ஆசிரியர்களை நாளும் ஆதரித்து வளர்த்தலில் காட்டும் கருணையும் என்னே! என்னே!

இவை ஒவ்வொன்றையும் பற்றிப் பேசிற் பெருகுமாதலால் முதல் இரண்டும் விடுத்து மூன்றுவதாய ஆசிரியர்பால் அன்னார் காட்டிய கருணையைமட்டும் சற்றே சுருங்கச்சொல்லி விளங்க வைப்பாம், இன்னோர் போர்டார் ஆதீன ஆரம்பத்தில் மஞ்ஞை சூழ்மந்தாரத்திடை ஆங்காங்கு வானில் விளக்கம் குன்றிக் காணும் விண்மீனை நிகர்த்து நாளும் நல்குரவால் நலிந்துநின்றவராவர், கடந்த பத்தாண்டாக கழகத்தார் படிப்படியாய் அவர்தம் இனத்தைப் பெருக்கியும் வானுரை வளர்பிறை அரைமதியொப்ப வளத்தால் நிறப்பியும் வந்தனர். போர்டின் குருகிய வருவாய் காலவரையின் விதிமுறையால்மட்டுமே வெண்ணிலவின் முக்காற்பங்காக்கவே முடிந்ததாம். தற்போது அஃது உழைப்பின் திறமறிந்து ஊக்கமூட்டுமுறையாலும் திகழ்வதாம். இதனால் எம்மனோர் அனுதினமும் அவர்தம் அருட்டிறம்வியந்து போற்றுபவராவர். இதுகொண்டும் யான் சொல்புகழ் ஏற்றதே என்பாரும் இனிதுணர்வாராக.

"கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணு டையர் கல்லாதவர்" என்ற பொய்யாமொழிப் பெரியார் பொன் னுரையாடி போர்டார் எழுத்துவாசனை யாதுமறியா வறிஞராய் பகலெல்லாம் பசிப்பிணியகற்ற பாடுபடும் பாரதமா நகரின் முகப் புண்ணைக் கண்ணேயாக்கும் கருத்தால் கடந்த ஓராண்டு கங்குல் பற்றி சில அமைத்தும் கற்பிக்கத் தலைப்பட்டனர். ஏழை மாந்தர் தவக்குறைவால் அவ்வெண்ணம் எண்ணியபடி கண்ணியமாய் நடைபெறாதே நின்றதாம். ஆகவே அத்தகைய அவ்வழியிற் அ ழித்திடும் பொருளை சென்ற ஆண்டில் மக்கள் பொதுப் புத்தக சாலை இரண்டமைத்து அவை முறையே குறிப்பிட்ட பன்னிருவி டங்களில் தலந்தோறும் நலம்பெற நாள் முப்பது தங்கிச் செல்வ தில் விதிமுறையுய் எம்மவர்க்கு கற்பிக்கப்பட்டதாம்.

இஃது "தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு கற் றனைத்தூறும் அறிவு" என்ற திருவள்ளுவர் திருவாக்கின்படி நாட் டில் கற்றோர்தம் அறிவு களங்கமறத் துலங்கக் காரணமாய் நிற்ற லோடு இப்பணி இயற்றக்கிடைத்த பாக்கியத்தால் எம்மனோர் நக ரவாசிகளின் அறிஞர் குளாத்துடன் அளவளாவி நிற்றற்கும் பாக் கியம் பெற்றவராவர். இதுகொண்டும் போர்டார்பற்றி யான் கூறும் மாண்புரை மணமுடைத்தென மக்கள் மகிழ்வாராக.

---

## கோகிலரங்கன்.

கரிசூழ்ந்தமங்கலம், திரு அரிஹர புத்ர சர்மா அவர்கள்.

மூன்றாவது அத்தியாயம்

(முன்தொடர்ச்சி)

என்னைவிட்டுப் பிரிந்து நீ என்ன நினைத்து வருந்துகிறாயோ! ..............அதோ ஒரு கட்டிடம் தெரிகிறது அங்கு யாராவதி ருக்கிறார்களோ என்று மெல்லப்போய்ப் பார்க்கிறேன்.

அந்நடுக் கானகத்தினிடை அஃதோர் சிறிய மண்டபம். அ தைச்சுற்றி நூறு மைல் வட்டத்திற்குள்ள பூதபேய் பிசாசங்களை யாண்டுவரும் பூத அரசன் அதில் சில சமயங்களில் தங்குவது

வழக்கம். இன்று நம் கதாநாயகியின் நன்மையின் பொருட்டோ அதில் தங்கி அயர்ந்து நித்திரைசெய்துகொண்டிருக்கிறான்.

கோகிலம்:— (தனக்குள்) ஹா! இதென்ன ஆச்சரியம். பெரியபூதமொன்று படுத்திருக்கிறதே! திருடர்களின் உபத்திரவம் நீங்கியதற்குச் சந்தோஷங்கொண்டு இங்கு சற்று தங்கி சிரமசாந்தி செய்துகொள்ளுவோமென்று நினைத்தேனே! நானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறதே! காதவழிகடந்து காசிக்குப் போனாலும் கருமம் தொலையவில்லையே! இவன் விழித்துக்கொண்டால் என்ன செய்வானோ! இக்கூட்டத்தலைவர்கள் மாமிஷபக்ஷிணியென பெரியோர்கள் சொல்லுவார்களே! வீணில் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லையே! எப்படியாவது நம் பக்தியினால் இவனை நம் வசப்படுத்தி இவனைக்கொண்டே இக்காட்டை கடக்குபாதைஅறியவேண்டும்.

என்ன செய்யலாம்? அவன் தன்வாளை மூலையில் சாற்றி வைத்திருக்கிறான். அதை யெடுத்துக்கொண்டும் தலைவிரிகோலமாயும் தேகமாத்தியந்தம் கரியைத் தடவிக்கொண்டு வெகு அட்டகாசத்துடன் அவனை எழுப்பலாம் பின் நடப்பதை அறிகிறேன். நொடிப்பொழுதில் எல்லாமாயின் வாளையுங் கைக்கொண்டாள். அவனை எழுப்ப சமீபம் நெருங்குவதும் பிறகு பயந்து சற்று விலகுவதுமாக கொஞ்சம் தாமதமாயின. பின்பு ஓர்வித தைரியங்கொண்டு அட்டகாசத்துடன் ஏய்! யாரடா நான் போவதைக் கவனியாமல் கால்களை நீட்டிப்படுத்துக்கொண்டு நித்திரை புரிகின்றனை? இதோ என் கையிலுள்ள இவ்வாளுக்கிறையாக்குகிறேன் பார்!

அயர்ந்து நித்திரை புரிகத பூத அரசன் திடீரென்றுண்டான சப்தத்தினால் அலறி எழுந்து முன்னிற்கும் ஸ்திரீயை வனதேவதைஎன நிச்சயித்துப்பயந்து தாயே! சரணம் என அடியற்ற மரம்போல் நம் கதாநாயகியின் கால்களில் விழுந்து தாயே! என் அம்மையே! ஜெகன்மாதே! நான் உன் அடிமை. உன் பாதம்

சரணமடைந்தேன். எனக்கு உயிர்ப்பிச்சை தந்து என்னை காப்பாற்றவேண்டும். நான் செய்த பிசகை மன்னிக்கவேண்டும்.

கோகில ம்:—கொஞ்சமேனும் மரியாதையில்லை? வந்த மனிதர்களை கவனியாமல் அயர்ந்து நித்திரை செய்கின்றாய்? என்ன இவ்விடத்தில் கேள்வி கேட்பாரில்லையோ?

பூதம்:—அப்படியல்ல தாயே! என்னை மன்னிக்கவேண்டும். நான் சின்னவனானதுகையால் நான் செய்த குற்றங்களை பொறுத்து என்னை ரக்ஷிக்கவேண்டும் தாயே.

கோகிலம்:—அடே! உன்னாலோ அல்லது உன் கூட்டத்தாராலோ எனக்கென்ன பிரயோசனம்?

பூதம்:—தாயே அடிமை காத்துக்கொண்டிருக்கிறேன். என்னால் ஏதாவது காரியமாகவேண்டியிருந்தால் அதன்படி நடக்க சித்தமாயிருக்கிறேன். என்னால் செய்யக்கூடிய காரியம் ஏதாவது உண்டோ?

கோகிலம்:—அடே! நான் உன்னரண்மனையில் நாலைந்துநாள் தங்கியிருந்து பின்பு போக விரும்புகிறேன். உனது அபிப்பிராயம் எப்படி?

பூதம்:—அப்படியே செய்யலாம்! இதற்காக இந்த ஏழை மீது இவ்வளவு கோபமாகுமா? நொடிப்பொழுதில் நாமிருவரும் நமது அரண்மனைக்கு போகலாம் வாருங்கள் தாயே. பரமேஸ்வரியே! திரிபுரசுந்தரியே! பார்வதியே! பகவதியே! கல்யாணியே! பத்திரகாளியே! என்னை காப்பாற்றவேணும்.

கோகிலம்:—அடே! நீ செய்த குற்றத்தைப் பொருத்தேன். இனிமேல் நீ இப்படி மெத்தனமாக இருக்கக்கூடாது. ஆனால்சரி உனது அரண்மனைக்குப் போகலாமா?

நொடிப்பொழுதில் இருவரும் பூதஅரண்மனை அடைந்து சமீபத்தில் கலிங்கதேசமிருந்து கொண்டுவந்து வைத்திருக்கும் ராஜ

குமாரத்தியை அழைத்து "சுந்தரம்" இந்தம்மை நம் குல குரு, ஏது வேண்டுமானாலும் உபசாரத்துடன் தடையின்றி செய்யணும் தெரியுமா? என் அம்மையின் மனம் கொஞ்சம் வருந்துமாயின் நம்முடைய குலம் நாசந்தான். அப்படி ஏதாவது குற்றங் குறை வந்தால் உன்னை சிரச்சேதம் செய்துவிடுவேன் என்று சொல்லி விட்டு அம்மனிடம் விடைபெற்றுக்கொண்டு வெளிச் சென்றான்.

சுந்தரம் என்பவள் ராக்ஷதன் வருவதற்கு எழுந்திருக்கவு மில்லை, அவன் சொல்வதைக் கவனிக்கவுமில்லை, அவனை நிமிர்ந்து பார்க்கவுமில்லை. அவளைச்சுற்றிலும் கண்ணீர் ஒரு சிறிய தடாகம் போல் தேங்கிக்கிடக்கிறது. இவைகளைக்கவனித்த நம் கதாநாயகி பின்வருமாறு சம்பாஷிக்கலானாள்.

கோகிலம்:—சகோதரியே! நான் உன்னைப்போல் ஸ்திரீ தான்! நான்தெய்வமுமில்லை, பூதமுமில்லை, பேயுமில்லை, பிசாசு மில்லை என்னை நிமிர்ந்து பார் என்று சொன்னாள்.

இம்மொழியைகேட்ட சுந்தரம் (தனக்குள்) ஏது இது ஒரு ஸ்திரீயின் தொனிபோலல்லவா இருக்கிறது என்று தன்மனதைத் தேற்றிக்கொண்டு சற்று நிமிர்ந்துபார்த்தாள். கோகிலம் சற்று நேரத்திற்கு முன் எவ்வேஷத்துடன் விளங்கினாளென்பதை இந்த கதையை வாசிக்கும் நேயர்களே அறிவார்கள்.

சுந்தரம்;—ஹா! ஐயோ! என்ன பயங்கரமான சுரூபம்! அடாபாவி! இப்படியும் என்னை இம்சை செய்யலாமா? துரோகி! சண்டாளா! இதைவிடப்பயங்கரமான உருவத்துடன் வந்தபோ திலும் அல்லது தேவேந்திரனைப்போல் வந்தபோதிலும் உன்னை கண்ணெடுத்தும் பாரேன். உன் எண்ணத்திற்கும் உடன்படேன். இது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

கோகிலம்:—இதுவும் என் விதிவசமே! என்னிடமுனக்கு சந்தேகமிருக்குமாயின், என் பின்னால் இதோ தெரிகிற அறைக் குள் வந்தால் நான் யாரென விளங்கும். நீ அடிக்கடி வந்து பார்ப் பதினால் நான் கட்டுப்படுவதாகக்குறிப்பிட்டகாலம் விர்த்தியாகிக்

கொண்டேவரும் உன் நன்மையை நீ கவனிக்கவில்லை. அம்மா நான் உன்னைப்போல் ஒரு பெண்தான். நான் விதிவசத்தினால் காட்டில் திருடர்களால் துரத்தப்பட்டு அவர்களின் சூழ்ச்சியினின்றும் தப்பித்தபின் வருகிறவழியில் இந்த பூதஅரசன் தூங்கிக்கொண்டிருக்கையில் கண்டேன். உடனே கீழேகிடந்த கறித்துண்டுகளை எடுத்துக்குழைத்து தேகமுழுமையும் பூசிக்கொண்டும், தலைவிரிகோலமாய் அவன் வாளைக் கையில் எடுத்துக்கொண்டும, அவனை அதட்டி எழுப்ப அவன் அலறி எழுந்து என்னைத் தெய்வமென நினைத்து காலில்விழுந்து தனக்கு உயிர்ப்பிச்சை தரவேண்டினான். வேறொன்றுமில்லை பயப்பட வேண்டாம்.

**சுந்தரம்:**—நீ என்னசொன்னாலும் என் மனது கேட்காது சமாதானப்படாது. உன்னை நிமிர்ந்து பாரேன். வீணில் என்னை நீ தொந்தரவு செய்யாதே.

(தொடரும்)

---

## திருக்குறள் பாயிர ஆராய்ச்சி.

திரு. போ. முத்தையபிள்ளை அவர்கள்.

திருவள்ளுவர்அருளிச்செய்த திருக்குறளில்கடவுள்வாழத்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன்வலியுறுத்தல் என்னும் நான்கதிகாரங்களும் பாயிரமாக முன்னர் வைக்கப்பெற்றுள்ளன. இந்நான்கதிகாரங்களும் திருவள்ளுவரால் செய்யப்பட்டவையோ, இவ்வதிகாரங்களுக்குப்பாயிரம் என்னும் பெயர் திருவள்ளுவரால் இடப்பட்டவையோ என்று பிற்காலத்தார் ஐயுறுதவண்ணம், திருக்குறள் அரங்கேற்றுங்காலத்து உடனிருந்த சங்கப்புலவர்களுள்

நத்தத்தனார்.

ஆயிரத்து முன்னூற்று முப்பதருங்குறளுங்
பாயிரத்தினோடுபகர்ந்த தற்பின்—எனவும்,

சிறுமேதாவியார்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்... 

நாடிய முப்பத்துமூன்று ஒன்று ஊழ்—கூடுபொருள்

எள்ளில் எழுபது இருபதிற்றைந்து இன்பம்
வள்ளுவர் சொன்ன வகை. எனவும்,

எறிச்சலூர் மலாடனூர்

பாயிரம் நான்கு இல்லறம் இருபான் பன்மூன்றே
தூயதுறவறம் ஒன்று ஊழாக—ஆய

அறத்துப்பால் நால்வகையாய் ஆய்ந்துரைத்தார். எனவும், குறளின் தொகையும் இயலின் வகையும் விரித்துக் கூறிவைத்தனர். ஆகையால் முதல் நான்கு அதிகாரங்களாலும் பாயிரம்என்பதும், திருவள்ளுவரால் செய்யப்பட்டவை என்பதும், பாயிரம் என்னும் பெயர் அவரால் இடப்பட்டதென்பதும் இனிது பெறப் பட்டமை காண்க. பாயிரம் என்பதன் பொருள் வரலாறு என்பதாம்.

பாயிரவகை

பாயிரம் பொது, சிறப்பு என இருவகைப்படும். அவற்றுள் பொதுப்பாயிரமாவது நூல் வரலாறு, நூலைக் கற்பிப்போன் வரலாறு, கற்பிக்கும் வரலாறு, கற்போன் வரலாறு, கற்கும் வரலாறு என்னும் ஐந்து உறுப்புக்களை உடையது. இவ்வைந்தும் நூல்களனைத்திற்கும் பொதுவாதலின் பொதுப்பாயிரமெனப்படும்.

சிறப்புப்பாயிரமாவது:—நூல் செய்தவன் பெயர், நூல்வந்த வழி, நூல் வழங்குதற்குரிய நிலம் நூலின் பெயர், இது கேட்ட பின் இது கேட்கத்தக்கது என்னும் சம்பந்தம், நூலிற் கூறப்படும் பொருள், நூல் கேட்டற்குறிய அதிகாரி, கேட்டதனால் உண்டாம் பயன் என்னும் எட்டு வரலாறுகளையும் உணர்த்துவது. இவ்வெட்டும் ஒவ்வொரு நூற்கும் வேரு வேறா யிருக்குமாதலின் சிறப்புப்பாயிரமெனப்படும்.

சிறப்புப்பாயிரம் செய்தற்குரியார்.

இவ்வெட்டனுள், நூல் செய்தவன் பெயரும் ஒன்றாகையால் பிறருக்குத் தோன்றாத நுட்பங்களெல்லாந் தோன்ற நூல் செய்திருப்பினும், தானே தன்னைப் புகழ்தல் தகுதியன்றாதலின்,

சிறப்புப்பாயிரம் நூலாசிரியர் செய்தல் கூடாதென்பர் இலக்கண நூலார். ஆயினும் சிறப்புப்பாயிரம் செய்தற்குரிய பிறருக்கும் இந்நூலாலுண்டாம் பயன், இதன் வழி, இதனைக் கேட்டற்குரிய அதிகாரி, இந்நூலிலே சொல்லப்படும் பொருள் என்னும் நான்கனையும் அறிந்தாலன்றி சிறப்புப்பாயிரம் செய்தற்கு மன எழுச்சி உண்டாகாது; அவற்றை அறியும் முறையில் ஒருவரோடொருவர் கருத்து வேறுபடுதலுங் கூடும். ஆதலின் அந்நான்கனையும் நூலாசிரியர் தாமே கூறுதல் முறையாகும். இங்ஙனம் நூலாசிரியர் கூறும் சிறப்புப்பாயிரம், தற்சிறப்புப்பாயிரம் எனப்படும். கடவுள் வணக்கத்துடன் இந்நான்கனையும் நூலாசிரியர் கூறும் முறை உண்டென்பது, ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிச்செய்த சிவஞான சித்தியாராலும் அறியக்கிடக்கின்றது. சித்தியாரில் மெய்கண்டான் நூல் சென்னியிற்கொண்டு என்றதனால் வழியும், மார்க்கர் கண்ட நூலோதி வீடு காதலிப்பவர்கட்கு என்றதனால் அதிகாரியும் புண்டரீகத்தாள் சேரும் பரிசினைப் புகலலுற்கும் என்றதனால் சேருமுறையாகிய சொல்லப்படு பொருளும், சேரலாகிய பயனும் கூறப்பட்டமை காண்க.

## முதலதிகாரம்: கடவுள் வாழ்த்தும், பயனும்.

திருக்குறளாசிரியரும் கடவுள் வாழ்த்து என்னும் முதலதிகாரத்தில் முதற்செய்யுளால் கடவுள் வணக்கம் கூறி, இரண்டாவது செய்யுளால் நூலைக் கற்றதனாலாயபயன் இறைவன் நற்றாள் தொழல் எனவும், மூன்றாவது முதலிய செய்யுட்களால் இறைவனது நற்றாளைத் தொழுதலாலுண்டாம் பயன் பிறவி யறுதலும் வீடுபெறுதலு மெனவுங் கூறினார். கற்றதனாலாய பயன் எனப் பொதுப்படக்கூறினாரேனும், ஏற்புழிக் கோடலென்னும் உத்தியால் இந்நூலென்பது கொள்ளப்படும்.

கடவுளை வழிபடும் முறை வாழ்த்து, வணக்கம், பொருளியல்பு உரைத்தல் மூவகைப்படும். ஆறிரு தடந்தோள் வாழ்க என்பது போல்வன வாழ்த்து முறையிற் செய்யும் வழிபாடு. பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றிபோற்றி என்பது

போல்வன வணங்கு முறையிற் செய்யும் வழிபாடு. கல்லால் நிழல்மலை, வில்லார் அருளிய, பொல்லார் இணைமலர், நல்லார் புனைவரே. என்பது போல்வன வழிபடப்படும் பொருளின் இயல்பை உரைக்கும் முறையிற் செய்யும் வழிபாடு. இம் மூன்றனுள், திருக்குறள் முதற்செய்யுளால் கூறப்பட்ட வழிபாடு பொருளியல்பு உரைக்கு முறையில் செய்யப்பட்டதாகும். பொருளியல்பாவது உலகத்திற்கு முதற்கடவுளாயிருக்குந்தன்மை.

(தொடரும்)

---

## குறிப்புகள்.

**திருவாங்கூர் நாடார் மஹா நாடு:**

சமீபத்தில் நடந்த நாடார் மஹாஜன மஹா நாட்டுத் தலைவர் திரு, டி. எஸ். ஆதித்த நாடார் அவர்களின் பிரசங்கத்தை முழுதும் ஆராய்ந்து பார்த்தோம், தங்கள் முன்னேற்றத்திற்குத் தங்கள் நிலைமையைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் சுயமரியாதை இயக்கம் நாடார்களைத்தான் சுற்றிக்கொண்டிருக்கிறதென்றும் அவ்வியக்கம் அவசியமில்லையென்றும், ஜாதி சமத்துவம் வேண்டுமென்றும் ஜாதி சமத்துவம் பெறவிரும்பும் நாடார்கள் ஆதித்திராவிடர்களைச் சமத்துவமாகப் பாவிக்கவெண்டுமென்றும், ஆலயப்பிரவேச உரிமைபெற வேண்டுமென்றும் கிரீஸ்தவநாடார்கள் ஹிந்துநாடார்களுக்கு உதவிசெய்ய அவகாசமில்லையென்றும் பிறபலவுங் காணப்பெறுகின்றன. இவைகளில் பெரும்பகுதியான யோசனைகள் பாராட்டத்தககன. கிரீஸ்தவ நாடார்கள் ஹிந்து நாடார்களுக்கு உதவிசெய்யமுடியவில்லையென்பது உண்மையானல், பிற ஜாதியார்கள் ஆலயப் பிரவேசம முதலியவைகளில் எப்படி உதவிசெய்ய இயலுமென்புதை எண்ணிப்பார்த்தால் இயலாது என்பது எளிதில் விளங்கும் என்றே எண்ணுகின்றோம். "தன் கையே தனக்கு உதவி" என்பதுபோல் தங்களுக்கெனத் தனி ஆலயங்கள் அமைத்துக்கொண்டும், பிறஜாதியார்களுக்குத தயாளசிந்தையுண்டாகும்வகையில் தங்கள் நிலைமைகளைச் செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும.

**பெரியார் பெருமை:**

இலங்கைக்கு முடிசூடாமன்னராய் விளங்குபவரும் பொதுசவே புண்ணியமெனக் கொண்டாற்றுபவரும் தமிழ் [illegible]சவம் இவைகளி[illegible]

நிலைகுலையாதவாறு வேண்டுவன செய்பவருமான திருவாளர் ஸர், பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் நமது வேளாளனுக்கு வலிந்து சந்தாத் தொகையை அனுப்பி ஆங்கிலத்தில் ஆர்வமிக்க ஆதரவுக்கடிதம் ஒன்றும் எழுதியிருக்கின்றார்கள். இவர்கள் பெருந்தகைமைக்கு நாம் அளவிலா மகிழ்ச்சியுடன் நன்றிபாராட்டுகின்றோம். இப்பெரியார்போன்று நம் நாட்டுச்செல்வமிக்குடையார் அனைவரும் நம்மை வலிந்து ஆதரித்து ஊக்கப்படுத்துவார்களென நம்புகின்றோம். மேற்குறித்த பெரியார் வேளாளன் இரண்டாவதாண்டிற்குரிய சந்தாவையும் சேர்த்து அனுப்பி யுதவியது போல் மற்றவர்களும் உதவுவார்களென நம்புகின்றோம்.

**வைசியராயின் வாக்கு:**

நமது வைசிராய் இர்வின் பிரபு தீபாவளியன்று விடுத்த பாஷ்யத்திற்கு (அறிக்கை) புதிய வருடமாகிய சென்ற ஜனவரி இறுதியில் இந்தியா சட்டசபையில் வியாக்கியானம் (பிரசங்கம்) செய்திருக்கிறார். வியாக்கியானத்தை ஆழ்ந்து நோக்கும் அறிவுடையார் அறுவறுப்பரென்பதில் ஐயமில்லை. இந்தியா உதவிமந்திரி லார்டு ரஷ்ஷலின் பேச்சுக்கும் இர்வின் பேச்சுக்கும் வேறுபாடில்லை யென்பதே நமது கருத்து. ரஷ்ஷல் குடியேற்ற நாட்டுச்சுதந்தரம் வெகு காலத்திற்குச் சாத்தியமில்லையென்கின்றார் இர்வின் பாஷ்ய வியாக்கியானத்தில் "குடியேற்ற நாட்டுச்சுதந்தரம் கொடுப்பதாய்ச் சொல்லவில்லை. குடியேற்றநாட்டுச் சுதந்தரம் பெறுவதற்கு மார்க்கம் சொல்லப்பட்டது" என்று விளக்குகின்றார். இந்தியர்களை இர்வின் பிரபு பகுத்தறிவுடையவர்களாகக் கருதியிருந்தால் இவ்வித வியாக்கியானஞ் செய்யமாட்டார். லார்டு ரஷ்ஷலும் இவ்விதமே மழுப்புகின்றார் இந்திய மக்கள் இதனை ஊன்றியுணர்ந்து ஒன்றுபட்டு ஒழுகுவதே உயரிய வழியாகும்.

**முனிசிபாலிட்டியார் முன்வரவேண்டும்:**

தூத்துக்குடி நகரம் நாளுக்குநாள் ஜனத்தொகையில் பெருகிக்கொண்டேவருகின்றது. மோட்டார் வண்டிகளும் பெருகிக்கொண்டே வருகின்றன. ரஸ்தாக்கள் முன்போலவேயிருக்கின்றன. மோட்டார் வண்டிகள் குதிரைவண்டிகள் பாரவண்டிகள் முதலியன செல்லும் ரஸ்தாக்களிலேதான் மக்களுஞ் செல்லவேண்டியதிருப்பதால் சிறப்பாக மோட்டார் பஸ்களும் பொதுவாக குதிரை வண்டிகளும் நகர எல்கைக்குள் மெதுவாக ஓட்டவேண்டுமென உத்திரவிட முனிசிபாலிட்டியார் முன்வா

வேண்டும். வண்டிகளை விரைவாக ஓட்டுவதால் மிகுந்த உயிர்ச்சேதமும், பொருட்சேதமும் ஏற்பட்டுவருகின்றது. சமீபத்தில் தை மாதம் பிறப்பன்று ஒரு குதிரை வண்டியை வேகமாக ஓட்டியதால் மற்றொரு மாட்டு வண்டி தவுடுபொடியாக நொறுங்கவும் குதிரை இறக்கும் நிலை எய்தவும் ஏற்பட்ட சம்பவம் யாவரும் அறிந்ததே; விரைவில் வேண்டுவனசெய்ய நகரசபை முன்வர வேண்டுகின்றோம்.

## நீதிபதியின் புத்திமதி:

திருநெல்வேலி செஷன்ஸ் ஜட்ஜ் முன்பாக நடந்துகொண்டிருந்த குலசேகரன் பட்டணம் திரு. C. இராமநாதபிள்ளை திரு. வீரவாகுபிள்ளை சம்பந்தப்பட்ட ஒரு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சுடலைமுத்துத்தேவரை குற்றவாளியல்ல என விடுதலை செய்ததோடு "குலசேகரன்பட்டணத்தில் கட்சி பிரதிகட்சிகளை யுண்டாக்கி நடத்திவருகிற சி. இராமநாதபிள்ளைக்கும் வீரபாகுபிள்ளைக்கும் வேறு நல்ல வேலை ஏதுவும் கிடையாதா" என்றும் ஜட்ஜி கேட்டாரென அறிகின்றோம். திருவாளர்களான இரு பிள்ளைமார்களையும் வேலையற்றவர்களென்றும் கெட்டவேலையில் தலையிடுகின்றவர்களென்றும் பொருள்படும்படி புத்திமதி கூறிய நீதிபதியின் நிலைமையைப் போற்றுவதுடன் இருபிள்ளைமார்களின் நிலையை நினைந்து பெரிதும் வருந்தி இருவரும் இனியேனும் சகிப்புத்தன்மையைக் கைக்கொண்டு பொருளைப் பாழாக்காமல் நீதிமன்ற விவகாரங்களினின்று விலகுமாறு வேண்டுகின்றோம். இவர்கள் விவகாரம் வேளாளர்களுக்கே பெரிய அவமானமாகும். இவர்கள் இவ்விவகாரத்தில் செலவு செய்திருக்கும் தொகை சுமார் 50000 ரூபாய் என்று சொல்லப்படுகிறது. இதனைக் கேட்ட எந்த வேளாளரும் இரங்காமலிருக்கமுடியாது. இப்பணத்தில் பத்தில் ஒரு பகுதி நமக்குக்கொடுத்தால் "வேளாளனு"க்கு மூலதனமாகிவிடும், புகழையும் புண்ணியத்தையும் கொடுக்கும், இத்தகைய நெறியில் செலவிடமுடியாததும் வீண் விவகாரங்களில் அளவு கடந்து செலவிடுவதும் நம்மவர்களின் இயற்கைக் குணமாகின்றது குறித்து மிக மிக வருந்துகின்றோம். இது குறித்து நீண்டதோர் வியாசம் கிடைத்திருக்கிறது. அதனை மறுமுறை வெளியிடக் கருதியுள்ளோம்.

## நமது கருத்து:

மேற்குறித்த இரு பிள்ளைமார்களும் நடத்திக்கொண்டுவரும் விவகாரத்தை நிறுத்திவிடுவதற்கு நமது ஜில்லாவிலுள்ள நடுநிலையுடைய சில பெ

ரிய குடித்தனக்காரர்களை ஒரு கமிட்டியாக நியமித்து அவர்கள் கூறும் யோசனைப்படி இருசாராரும் கேட்டு நடப்பதாக நிர்ணயித்துக்கொண்டு பட்சபாதமற்ற முறையில் தகுந்த யோசனையைக் கமிட்டியார் முடிவுசெய்து விவகாரத்தை நிறுத்தி மேலால் நிச்சயமாக விரோத பாவனை யில்லாமலும் கூடுமானால் நட்புரிமையுடனும் நடந்துகொள்ளும்படி ஒருமுடிவு செய்தலவசியமெனநாம் கருதுகின்றோம். இம்முறையைக்கைக்கொண்டு நடந்துவிட்டால் நமது சமூக முன்னேற்றத்திற்கு நல்ல வழியாகும்.

### காலண்டர்கள்:

தூத்துக்குடி "ஸ்ரீ ராம் பிரஸ்" அச்சுக்கூடத்தார் மூன்று வகையான காலண்டர்கள் வெளியிட்டுள்ளார்கள். மூன்று பிரதிகளும் நமக்கு அனுப்பிவைத்தார்கள். நல்ல கடிதத்தில் பல்வர்ணங்களால் அழகான முறையில் அச்சுகள் சுத்தமாய் அமைந்திருக்கின்றன

திருச்சிறுப்பள்ளி, ராஜிலோ டயமண்ட்ஸ் கம்பேனியார் கார்டு சைசில் அச்சிட்டு அனுப்பிய அழகிய காலண்டர்வரப் பெற்றோம்.

திருச்சிறுப்பள்ளி ஷராப் வியாபாரம் ஸ்ரீ மோதி; ஸ்ரீராமுலு செட்டியாரவர்கள் நல்ல கிளேஸ் கடிதத்தில் பல வர்ணங்களோடு தமிழ் ஆங்கிலம் தெய்திகளுடன் அமாவாசைமுதலிய புண்ணிய தினங்கள் அரசாங்க விடுமுறைநாட்கள் குறிக்கப்பட்டிருக்கும் 12-சீட்டுகளடங்கிய அழகிய காலண்டர் அனுப்பிவரப் பெற்றோம்.

கொழும்பு 205 சீஸ்றீட் ஸ்டீல் டிரங்குவியாபாரி திரு S. M. S. மெய்தீன் பாவா இராவுத்தரவர்கள் அனுப்பிய தினசரி சீட்டுள்ள காலண்டர் வரப்பெற்றோம். ஒவ்வொரு சீட்டும் ஆங்கிலம் தமிழ் அரபி இராகுகாலம் சுபவேளை திருக்குறள் முதலிய குறிப்புகளுடன் மிளிர்கின்றன. பஞ்சாங்கமில்லாமலே அனைத்தும் அறிந்துகொள்ளலாமென்பதுமிகையாகாது.

### பொங்கல் புதுநாள் மகிழ்ச்சி:

பொங்கல் புதுநாள் மகிழ்ச்சியின் பொருட்டு போடிநாயக்கனூர் சம்பந்த சாணக்யம், திரு. சிவ. ப. திருஞான சம்பந்தன் அவர்கள் முதலான யோன்பர்கள் பலர் பற்பல கடிதங்கள் வரைந்து அனுப்பினார்கள். அனுப்பிய அனைத்திலும் மேற்கண்ட பிள்ளையவர்கள் ரோஸ்கலருள்ள அழகிய கார்டில் பொங்கல்புது மலர் என்ற தலைப்பில் செய்யுள் முறையால் அச்சியற்றி அனுப்பிவைத்தார்கள்.

காலண்டர்கள் பொங்கற்புதுநாள் கடிதங்கள் அனுப்பிய அன்பர்கள் அனைவருக்கும் நமது அன்பான வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

### லவுலக நிகழ்ச்சிகள்:

இங்கிலாந்தில் வடகிழக்கு ரயில்வே கம்பேனியார் புதிதாக ஓர் எஞ்சினைச் செய்துமுடித்து வெள்ளோட்டம்விட்டுப் பரிசீலனை செய்ததில் முன்னுள்ள எஞ்சின்களைப்பார்க்கிலும் இது பல வகையிலும் மாறுபட்டதாகவும், நிலக்கரிச் செலவு ஐந்திலொருபங்கு குறைவென்றும் மிகவும் வேகமாய்ச் செல்லக்கூடியதென்றும் கண்டிருக்கின்றார்களாம். எஞ்சின்ஏற்பாடு செய்த திரு. ஏச்சர் கிரீஸ்லியே ஓட்டிச்சென்றாராம்.

விநோத விவாகம்: அமெரிக்காவிலுள்ள பில்டல் பியாநகரில் சமீபத்தில் ஒரு விநோத விவாஹம் நடைபெற்றதாம். திரு. வில்லியம் மோயர் என்னும் வாலிபர் ஒரு அழகிய பெண்ணை நகர மாஜிஸ்திரேட்முன்னிலையில் விவாஹம் செய்துகொள்கையில், இரண்டு வருட காலத்தில் குழந்தை பிறக்காவிடில் விவாஹ ரத்துச்செய்து கொள்வதென ஒரு ஒப்பந்தஞ்செய்துகொண்டனராம்.

சுருட்டுக் குடியைத் தடுத்தல்: வீயன்னு நகரில் உபயோகப்படுத்தப்படும் ரயில், டிராம், பஸ் முதலிய போக்குவரத்துச் சாதனங்களெதிலும் யாரும் புகைச் சுருட்டுக்குடிக்கலாகாதென்று அரசாங்கத்தார் தடையுத்திரவு பிறப்பித்திருப்பதாய்த் தெரிகின்றது.

ஆணும் பெண்ணும் சேர்ந்து படிக்கக்கூடாது: மதப்பற்றில்லாதவர் கையில் மாணவர்களைக் கல்வி பயிலவிடுவது மிகவும் கெடுதியை விளைவிக்குமென்றும், அதுபோலவே ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் ஒரே வகுப்பில் சேர்ந்து படிப்பதும் பல மதங்களைத் தழுவியவர்கள் சேர்ந்து படிப்பதும் மிகவும் கெடுதியாகுமென்று ரோமாபுரி, திரு, போப் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றார். இதைத்து பற்பல மததினரும ஊன்றியுணரவேண்டியதவசியம்.

பெண்ணை விழுங்கிய அரக்கன்: அமெரிக்காவில் மெஸ்லாஸ் என்ற ஜில்லாவில் யாடமெக் என்னுமிடத்தில் நீக்ரோ ஜாதியைச் சேர்ந்த ஒருவன் இரண்டு பெண்களைக் கொன்று தின்றதாகவும் உடனே ஜனங்கள் கோபங்கொண்டு கூடி அவனைப்பிடித்து வதைத்ததாயும் செய்தி கிடைத்திருக்கிறது.

கிளிக் காய்ச்சல் பீதி: சமீபத்தில் "சிட்டகோஸிஸ்" என்ற ஓர் வியாதியால் ஜர்மனியிலும் அமெரிக்காவிலும் பலர் மரணமடைந்தார்களென்றும் இந்த வியாதி கிளிகளிடமிருந்தே பரவுவதாக வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகின்றார்களென்றும் மாளிகாவில் ஒருவர் இந்த வியாதியால் இறந்ததாகக் கேள்விப்பட்ட திருவேரில் வார விக்ஷயரில் பலர் தமது கிளிகளைக் கொல்லத் தலைப்பட்டனரென்றும் பாமிங்காமில் ஒருவர் பதினைந்து கிளிகளைக் கொன்றுவிட்டனரென்றும் தெரிகிறது.

ஆச்சரியமான உடம்பு: உருது முதலிய பாஷைகள் உள்ள பெண்ணின் உடம்பு ஒன்று அப்பர் பர்மாவில் பொது மக்களிடை காண்பிக்கப்பட்டு வருகின்றதாம். அக்குழந்தை 3-அடி 2-அங்குலமாம். சுற்றளவு (பருமன்) 8 அங்குலமாம். உடம்புமேல் தோன்றும் எழுத்துக்கள் யாவும் பொன்னிறமாயிருக்கின்றனவாம்.

## இந்தியாவின் வறுமை:

அந்நிய நாட்டுச் சாமான்களில் பல்வித துணிகள் மட்டும் மாகோடி ரூபாயும் சோப்புத்திணுசுகளில் 171 லட்சரூபாயும் பேப்பர் பென்சில்களில் 91 லட்ச ரூபாயும் வாசனைத் திரவியங்களில் 62 லட்ச ரூபாயும் தீப்பெட்டிகளில் 39 லட்ச ரூபாயும் வருடந்தோறும் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றதென்று சென்னை இளைஞர் சங்கத்தார் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

இந்தியாவில் கோதுமைச் சாகுபடி: உத்தேசக் கணக்குப்படி 1929-30-ல் 23,319,000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலங்களில் சாகுபடியாயிருக்கிறதென்றும் இவ்வருடம் நூற்றுக்கு நாலு மட்டுக்கு குறைந்திருக்கிறதென்றும் தெரிகிறது.

## பசு வதை:

இந்தியாவில் வருடந்தோறும் 5-லட்சம் பசுக்கள் கொல்லப்படுகின்றனவென்றும் அதில் 3-லட்சம் பசுக்கள் இந்திய ராணுவப்படை உத்தியோகஸ்தர்களுக்காகக் கொல்லப்படுகின்றனவென்றும் தெரிகிறது. பசுக் கொலையால் 20 லட்சம் குழந்தைகள் பாலில்லாமல் மரணமடைவதாயும் தெரிகிறது.

## பூர்வ ஜென்ம உணர்வு:

மெயின்புரி ஜில்லாவில் கௌராரி கிராமத்தில் 2-வயது தன்னுடைய பூர்வ ஜன்ம வறலாற்றைக் கூறுகின்றதாம். கடைவைத்து வியாபாரம் செய்ததாயும் ஒருநாள் சாமான் எடுக்கக் கடைக்குள் போனதாயும் அங்கு பாம்புகடித்து இறந்ததாகவும் தனக்கு ஒரு மனைவியும், ஒரு மகனும் ஒரு மகளும் பர்ஹாவில் கௌராரியும் மூன்று மைல் தூரமாதலால் இச்செய்தி மனைவி மக்களுக்குத் தெரியவே 2-வயதுக் குழந்தையைப் பார்க்கவந்தார்களென்றும் அப்பொழுது அங்கு திரளான ஜனங்கள் கூடியிருந்தும் "மனைவி" "மக்களை" குழந்தை அடையாளம் கண்டுபிடித்துக்கொண்டதென்றும் பின்னர் (விதைவையாகிய) மனைவி தன்னூருக்குத் திரும்பவே (2-வயது பையனாகிய) கணவன் அவளை வெளியே விடக்கூடாதென்றதாகவும் அவள் பையனை தன்னோடு அனுப்பும்படி கேட்டதாயும் இக்காட்சி காண்போர் உள்ளம் கவருவதாயிருக்கின்றதென்றும் செய்தி கிடைத்திருக்கிறது.

தூத்துக்குடி ஸ்ரீ சண்முக சச்சிதானந்த சபையின் மூன்றாவதாண்டு நிறைவு விழா வருகிற மார்ச்சுமீ 1, 2 தெய்தி சனி, ஞாயிறுகளில், இராமநாதபுரம் மேன்மைதங்கிய இளைய மகாராஜா திரு. B ராஜாராம் பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அப்பொழுது புலவர் பெருமக்கள் பலர் பற்பலபொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். ஆதலின் அன்பர்களெல்லாம் பொருளுதவிசெய்து ஆதரிப்பதோடு விழாவிற்கு விஜயஞ்செய்து ஆதரிக்கும்படி வேண்டுகிறேன் எனக் காரியதரிசி, திரு. பா. இசக்கியப்பன் அறிவிக்கிறார்.

முத்தமீடுவதால் ஆயுள் குறைகிறதாம்: அமேரிக்காவில் கிரேபார் மின்சார கம்பேனியின் ஆராட்சிசாலையில் திரு. ஏர் ஜே. ஈவஸ் என்பவர் கண்டுபிடித்த ஒரு கருவியைக்கொண்டு ஒரு ஆண் மகனையும் பெண் மகளையும் முத்தமிடச்செய்து முத்தமிட்ட சமயத்தில் இருதயம் முன்னிருந்ததைவிட ஐந்து தடவை அதிகமாகத் துடித்ததைப் பரிசிலனைசெய்து பார்த்ததில் 280 தடவை முத்தமிட்டால் ஆயுள் நாளில் ஒரு முழுநாள் குறைந்துவிடுகிறதென்றும், சினிமா நடிகர்கள் முத்தமிட்டுக்கொள்ளும் பொழுதும் சினிமாப் படங்களில் முத்தமிடுவதைப் பார்க்கும்பொழுதும் ஆயுள் குறைகின்றதென்றும் தெரிகிறது. முத்தமிடுவதைப் பார்ப்பதும் ஆயுள் குறைவு என்றால் முத்தமிடுவதன் குறைவைக் கூறத் தேவையில்லை.

திருச்செந்தூர் திருச் செந்திலாதிபன் திருவருட் சங்கத்தின் சார்பாக சென்றதை மாதப்பிறப்பன்று மாலை 5-மணிக்கு சிவன்கோவில் முன் கொட்டகையில் கூடிய திரளான ஜனங்கள் முன்னிலையில் தமிழ்வேத வித்தியாசாலை மாணவர்கள் தேவாரம் பாடிய பின், திரு. அருணாசலம்பிள்ளையவர்கள் 'பிரசாத மகிமை'' என்பதுபற்றியும், மாணவர் திரு. இராமையா ''முகனூர் சரிதம்''பற்றியும், திரு. சண்முகசுந்தரம்பிள்ளையவர் ''உழவாபெருமை'' என்பதுபற்றியும், சங்கத்தின் காரியதரிசி ''மூர்த்தி நாயனூர்] சரிதமும், திரு. கோமசுந்தர உபாத்தியாயரவர்கள் ''கல்லானைக்குக் கரும்பருத்திய திருவிளையாடல்பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள் என்று திரு. முத்துக்குமாரசுவாமிபிள்ளையவர்கள் அறிவிக்கிறார்கள்.

**சந்தா நேயர்களுக்கு:**

குறித்த காலத்தில் ''வேளாளன்'' கிடைக்கப்பெறாதவர்கள் உடனே நமக்கு அறிவித்தல் அவசியம். பத்திரிகை அனுப்பித் தருவதற்கு வசதி ஏற்படும். தூத்துக்குடி சந்தா நேயர்களில் சந்தாக்கொடாதவர்கள் சுணக்காமல் நமது வகை நம்பி நாயுடு வசம் செலுத்திவிக்க வேண்டுகிறேன்.

---

## பிராமணரல்லாதார் இயக்கத்தின் இரகசியம்.

அலகபாத் லீடர்ப் பத்திரிகையின் ஆசிரியரும் மாஜி மந்திரியுமான திரு. ஸி. ஒய். சிந்தாமணி சென்றவாரம் விசாகப்பட்டணத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்:-

1919-ம் ஆண்டில் கூட்டுப் பார்லிமெண்ட் கமிட்டியின் கூட்டம் நடைபெற்றபோது நான் இங்கிலாந்திலிருந்தேன். சின்ஹா பிரபு சென்னை மாகாண அரசாங்கத்தைச் சேர்ந்த ஸர். அலெக்சாந்தர் கார்டியூவைக் குறுக்கு விசாரணைசெய்துகொண்டிருந்தார், அவர் சென்னையில் பிராமணரல்லாதார் இயக்கம் வளர்ந்து வருவதன் காரணத்தைப்பற்றிக்கேட்டபோது ஸர். கார்டியூ சென்னைப் பிராமணர் பிராமணரல்லாதாரை ஒடுக்கிவந்ததின் பயனாய் அந்த இயக்கம் ஏற்பட்டதெனப் பதிலளித்தார்.

அரசாங்கத்துக்கும் இந்த இயக்கத்துக்கும் சம்மந்தமுண்டா வென ஸின்ஹா பிரபு வினவியபோது ஸர். கார்டியூ இல்லையென அழுத்தமாகக் கூறினார். ஸின்ஹா பிரபு தம் கையிலிருந்த அரசாங்க ரிப்போர்ட்டிலிருந்து ஒரு பகுதியைப் படித்துக் காட்டினார். ராஜிய மனப்பான்மையுள்ள பிராமணருக்கு எதிராக ஸர். பி. தியாகராஜ செட்டியார், டாக்டர் நாயர் ஆகியோரைத் தலைவராகக்கொண்ட பிராமணரல்லாதார் இயக்கம் அரசாங்கத்தாரால் ஆதரிக்கப்பட்டதென அதில் கூறப்பட்டிருக்கிறது.

அந்த அபிப்பிராயத்தை அரசாங்க அங்கத்தினரா யிருந்த காலத்தில் ஆதரித்தது உண்டா? அல்லது அவ்வித அபிப்பிராயம் வெளி யிட்ட துண்டா? என்ஸின்ஹா பிரபு வினவியதற்கும் ஸர் கார்டியூ மறுபடியும் இல்லையென மிக அழுத்தமாகப் பதிலளித்தார். பின்னர் ஸின்ஹா பிரபு சென்னை அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்டதும் ஸர். அலெக்ஜாந்தர் கார்டியூவின் சொந்தக் கையெழுத்தடங்கியதுமான ஒரு ரிப்போர்ட்டைக் காட்டி அதில் உள்ள கையெழுத்து அவருடைய தல்லவா எனக் கேட்டார். ஸர் கார்டியூ வேறு வழியில்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று பிறகு அவர் என்ன சொல்ல விரும்புகிறாரென ஸின்ஹா பிரபு வினவியதற்குத் தாம் வேறொன்றும் சொல்வதற் கில்லையென ஸர் கார்டியூ கூறினார். ஸின்ஹா பிரபுவும் தாமும் வேறெந்தக் கேள்வியும் கேட்கப்போவதில்லை யெனக் கூறிவிட்டார்.

மலாய் நாட்டுச் சுயமரியாதைப் பிரசாரத்துக்குச் சென்ற ராமசாமிப் பெரியாரும் அவர் பரிவாரத்தாரும் 16—1—30 வியாழனன்று திரும்ப வந்து விட்டார்களென்று அறிகிறேன். சுயமரியாதைப் பிரசாரத்திற்காக அவர்கள் புறப்பட்டுப்போய் சுமார் ஒரு மாதந்தான் ஆகிறது அவர்கள் போகவரக் கப்பல் யாத்திரையிலேயே பத்துநாள் கழிந்துவிட்டது. பாக்கி இருபதுநாள் கூட இல்லை. மலாய் நாட்டில் அவர்கள் சுமார் இரண்டு மாத காலமாவது யாத்திரை செய்து பிரசாரஞ் செய்வார்களென்று நினைத்தேன், ஆனால் இவ்வளவு விரைவில் அவர்கள் திரும்பி வந்துவிட்டதை நோக்கினால், அவர்கள் பிரசாரத்திற்கு அங்கு வசதியில்லையோ என்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது.

லோ. கோபகாரி.